**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 124/2017**

Deposition of the witness for Prosecution **PW** 3
Name : **வேல்முருகன்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (07.05.2026)

A1, A2 absent, petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் மேலகரத்தில் குடியிருந்து வருகிறேன். அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிகிறேன். எதிரிகள் மாரியம்மாள், கிருஷ்ணன் ஆகியோரை தெரியும். அ.சா.1 யை தெரியும். அ.சா.1 க்கும், எதிரிகளுக்கும் இடையே வீட்டினை கிரையம் வாங்குவது சம்மந்தமாக பேசி முடித்துவிட்டார்கள். அதன்பின்பு தான் தெரியவந்தது. அந்த வீட்டிற்கு வங்கியில் ரூ.10 லட்சம் கடன் இருப்பது. அதன்பின்பு மேற்கொண்டு ரூ.2 லட்சம் கடனாக அ.சா.1 யிடம் எதிரிகள் வாங்கினார்கள். அந்த ரூபாயை 2 மாதத்தில் திருப்பி தருவதாக சொன்னார்கள். ஆனால் கொடுக்கவில்லை. அதை கேட்டதற்கு எதிரிகள் தகாத வார்த்தைகளால் என்னையும், அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை பேசினார்கள். அதனால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் எனக்கு எப்படி தெரியும் என்றால் உறவினர்கள் ஆவார்கள். அந்த ரீதியில் எனக்கு எதிரிகளை தெரியும். நான் கிரைய ஆவணம் எதுவிலும் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நாள் தேதியில் 1,2 எதிரிகள் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும், எங்களை திட்டவும் இல்லை, மிரட்டவும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். அன்றைய தினம் பணியில்

இருந்தேன் என்பதற்கு போலிசார் விசாரணையில் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவர் 1, 2 எதிரிகளிடம் பெற்ற பணத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-S.Ilayaraja,
Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 124/2017**

Deposition of the witness for Prosecution **PW** 2
Name : **பேச்சிமுத்து**
Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (07.05.2026)

A1, A2 absent, petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் வாசுதேவநல்லூரில் குடியிருந்து வருகிறேன். மளிகை வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகள் மாரியம்மாள், கிருஷ்ணன் ஆகியோரை தெரியும். அ.சா.1 யை தெரியும். ரமேஷ் எதிரிகளிடம் வீட்டினை அட்வான்ஸ் கொடுத்து முடித்தார். அதன்பின்பு கிரைய பத்திரம் முடிப்பதற்குள் தவணையாக கட்டுவதாக அவர்களுக்குள் பேசி முடித்து கொண்டார்கள். அதன்பின்பு பத்திரம் முடிக்கும் சமயத்தில் பேங்கில் தான் பத்திரம் உள்ளது என்று எதிரிகள் சொன்னார்கள். பேங்கில் போய் பார்த்ததற்கு ரூ.2 லட்சம் கட்டினால் தான் வீட்டை மீட்க முடியும் என்று சொன்னார்கள். அ.சா.1 எல்லா பணத்தையும் எதிரிகளிடம் கொடுத்துவிட்டார். எதிரிகள் அந்த 2 லட்சத்தை கடனாக கொடுங்கள் திருப்பி தருகிறோம் என்று சொன்னார்கள். மொத்த பணத்தையும் கொடுத்த பின்பு ரூ.2 லட்சத்திற்கு என்ன வழி என்று கூறினார் ஆனால் எதிரிகள் வட்டி போட்டு தருவதாக சொன்னார்கள். அதன்பின்பு அ.சா.1 பணத்தை கொடுத்துவிட்டார். அதன்பின்பு பத்து நாள் கழித்து பணத்தை கேட்டபோது கிருஷ்ணன் அ.சா.1 யும், என்னையும் தரக்குறைவாக பேசினார். அதனால் நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு ரமேசை எப்படி தெரியும் என்றால் என் உடன் பிறந்த சகோதரர். நான் வாசுதேவநல்லூரில் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். பணம் சம்மந்தமாக ரூபாய் 2 லட்சம் தொடர்பாக எழுதப்பட்ட எந்த ஆவணத்திலும் சாட்சியாகவும், அறிவேன் சாட்சியாகவும் கையொப்பம் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் ஆவணம் எதையும் போலிசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். 03.08.2012 ம் தேதி செய்த கிரைய ஆவணத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று கையொப்பம் செய்துள்ளேன். நான் மளிகை கடையை காலை 9 மணிக்கு திறந்து மாலை 8 மணிக்கு அடைப்பேன். சம்பவ சமயத்தில் மளிகை கடையை பூட்டிவைத்துவிட்டுதான் வந்துள்னே் என்று போலிசாரிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் அ.சா.1 க்கு உடன்பிறந்த சகோதரர் என்பதால் வயதான 1, 2 எதிரிகளிடமிருந்து பணத்தை பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது அதில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து எதுவும் போடவில்லை . நான் சொன்னநாள் சொன்ன நேரத்தில் எதிரிகள் என்னை தரக்குறைவாக பேசவும் இல்லை, திட்டவும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-S.Ilayaraja,
Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 124/2017**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : **ரமேஷ்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (07.05.2026)

A1, A2 absent, petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் திருச்சியில் குடியிருந்து வருகிறேன். மளிகை வைத்து தொழில் செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகள் மாரியம்மாள், கிருஷ்ணன் ஆகியோர்களை தெரியும். எனக்கும், எதிரிகளுக்கும் வீடு வாங்குவது சம்மந்தமாக பத்திரம் முடிப்பதில் பிரச்சனை இருந்து வந்தது. ரூ.2 லட்சம் கேட்டதற்கு கடந்த 08.04.2014 ம் தேதி சாயங்காலம் சுமார் இரவு 7 மணிக்கு குற்றாலம் என் வீட்டின்முன்பாக மாரியம்மாள் வீட்டுக்காரர் கிருஷ்ணன் என்பவரிடம் பணத்தை கேட்டேன். அதற்கு என்ன வேனாலும் செய்து கொள் என்று தேவடியா பயலே என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். என்னுடைய அனுபவம் தான் உன் வயது உன்னை உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார். நானும், எனது அண்ணனும் சேர்ந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். நடவடிக்கை எடுக்கவில்லை. அதன்பின்பு நீதிமன்றத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்க மனு தாக்கல் செய்து வழக்கு பதிவு செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது சாட்சியம் அளித்தது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் 1வது எதிரியிடமிருந்து வீட்டினை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரையத்திற்கு போட்ட கிரைய ஒப்பந்தம் என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான். அதிலுள்ள கையொப்பம்

என்னுடையதா என்றால் அதுமாதிரி உள்ளது நான் போடவில்லை. அதில் வீட்டுகிரையமாக ரூபாய் 13 லட்சம் உள்ளது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் முன்பணமாக ரூபாய் 2 லட்சம் என போடப்பட்டுள்ளது என்றால் அதிலும் நான் கையெழுத்து போடவில்லை. அதில் சேலம் ஸ்டேட் பேங்கில் கட்டிய பணம் போக மீதம் உள்ள ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல அந்த ஒப்பந்தம் நான் போடவில்லை. மாரியம்மாளுக்கு 03.07.2012 ம் தேதி PHEL வங்கியிலிருந்து ரூபாய் 2 லட்சத்திற்கு பணம் அனுப்பியதாக சொல்லிதான் அந்த பணம் வரவில்லை என்று வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரி மாரியம்மாள் வீட்டினை நான் கிரையம் எழுதி வாங்கிய தேதி 03.08.2012 என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் ரூ.14,28,000/– ம் என்றுதான் போட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ரூ.14,28,000/– ம் கையில் ரொக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 30.07.2012 ம் தேதி வங்கியின் மூலமாக பரிமாற்றம் செய்யப்பட்ட ரூபாய் 2 லட்சம், அந்த தொகையையும் சேர்த்துதான் ரூ.14,28,000/– ம் என்றால் சரியல்ல. 1 வது எதிரி வயதானவர், படிப்பறிவற்றர் என்பதால் அவரிடமிருந்து எழுதி வாங்கிவிட்டு பணத்தை பறிக்க வேண்டி ரூ.14,28,000/– த்தில் வங்கி பரிமாற்றம் மூலம் கொடுத்த ரூ.2 லட்சமும் சேர்த்துதான் எனது வழக்கிற்காக பணத்தை பறிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக ரூபாய் 27 லட்சம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் நான் எதிரிகளுக்கு கிரையத்தொகை ரூபாய் 11 லட்சம் தான் கிரைய ஆவணப்படி கொடுத்துள்ளேன் மீதத்தொகை நாளது தேதிவரை கொடுக்காமல் ஏமாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து பணத்தை பறிக்க வேண்டும் என்று பொய்யாக நடக்காததை நடந்ததாக கூறி வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 03.08.2012 ம் தேதிக்கு பின்பு 1, 2 எதிரிகள் ஊரிலேயே இல்லை சேலத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 08.04.2012 தேதியில் எதிரிகள் குற்றாலத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. என்னை எதிரிகள் ஏசவும் இல்லை, மிரட்டவும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-S.Ilayaraja,
Judicial Magistrate, Shenkottai